# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: [ ][ ][ ][ ][ ][ ]

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

I. பலவுள் தெரிக: 14×1=14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. பொருத்துக :
   அ) திருவல்லிக்கேணி ஆறு - 1. மாவலிபுரச் செலவு
   ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2. கல்கோடாரி
   இ) பல்லாவரம் - 3. அருங்காட்சியகம்
   ஈ) எழும்பூர் - 4. கூவம்
   அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1
3. 'விளியறி ஞமலி' இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
4. வளைஇ - இலக்கணக் குறிப்பு
   அ) அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
   இ) உரிச்சொற்றொடர் ஈ) சொல்லிசை அளபெடை
5. தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல்
   அ) தொல்காப்பியம் ஆ) புறப்பொருள் வெண்பாமாலை
   இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம்
6. "குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனேம்' இங்கு அறுவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
   அ) வாலி ஆ) சுக்ரீவன் இ) வீடணன் ஈ) குகன்
7. 'பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
   பிடியா திருக்க வேண்டும் - என்னும் தொடர் இடம் பெற்ற நூல்
   அ) தெய்வமணி மாலை ஆ) திருவள்ளுவமாலை
   இ) குருமணி மாலை ஈ) திரிபுரை மாலை
8. காவினம் கலனே சுருக்கினெம் கலப்பை - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி இ) இசைக் கருவி ஈ) வேளாண் கருவி
9. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப்
   புகட்ட மிக வளர்ந்தாய்'' - இவ்வரிகள் இடம் பெறும் நூல்
   அ) புறநானூறு ஆ) கலிங்கத்துப்பரணி இ) தமிழ்விடுதூது ஈ) நாலடியார்
10. சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது
    அ) புயல் அபாயக் குறியீடுகள் ஆ) உத்தரவுக் குறியீடுகள்
    இ) எச்சரிக்கைக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



11. "காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ............ பயின்று வந்துள்ளது.
அ) பயன் படிமம் ஆ) வினைப் படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
12. தோப்பில் முகமது மீரான் எந்த நூலிற்காக சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்.
அ) சாய்வு நாற்காலி ஆ) வெண்சங்கு இ) வேருக்கு நீர் ஈ) கூனன் தோப்பு
13. 'நுந்தை' என்னும் சொல்லின் பொருள்
அ) தாய் ஆ) தந்தை இ) தமக்கை ஈ) உறவினர்
14. யார்? எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

## பகுதி - II

### *பிரிவு - 1*

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×2=6**

15. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?
16. குளிர்காலத்தில் "பறவைகளும் விலங்களும்" எவ்வாறு நடுங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது.
17. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
18. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

### *பிரிவு - 2*

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×2=4**

19. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடரமைக்க.
20. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
21. அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

### *பிரிவு - 3*

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14**

22. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*
அ) பூம்பாவாய் ஆ) எத்திசை
23. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:*
அ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு
ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
24. *பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
அலை, அளை, அழை
25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :*
அ) வெங்காயம் ஆ) கோவில்
26. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.
27. *பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக:*
அ) Visa ஆ) Conviction
28. *ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக:*

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) சாற்றி ஆ) பேசுவார்

29. *உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக:*

அ) தாமரை இலை நீர் போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

30. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:*

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது

ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

## பகுதி - III

### *பிரிவு - 1*

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×4=8

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
33. "மூன்றான காலம் போல் ஒன்று" எவை ஏன் விளக்குக.
34. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

### *பிரிவு - 2*

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

35. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.
37. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
38. குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களைக் கொண்டு தமிழர்தம் பரம்பரை எனும் பெயரில் குடும்ப மரம் வரைக?

### *பிரிவு - 3*

குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: 3×4=12

39. அ) பொருள் வேற்றுமை அணியினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

(அல்லது)

ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின்இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. *இலக்கிய நயம் பாராட்டுக:*

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

41. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

42. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

**சங்க இலக்கியங்கள்**

| எட்டுத் தொகை | | | பத்துப்பாட்டு | |
|---|---|---|---|---|
| அகம் | புறம் | அகமும் புறமும் | அகம் | புறம் |
| நற்றிணை<br><br>குறுந்தொகை<br>ஐங்குறுநூறு<br>அகநானூறு<br>கலித்தொகை | புறநானூறு<br>பதிற்றுப்பத்து | பரிபாடல் | குறிஞ்சிப்பாட்டு<br>முல்லைப்பாட்டு<br>நெடுநல்வாடை<br>பட்டினப்பாலை | மதுரைக்காஞ்சி<br>திருமுருகாற்றுப்படை<br>பொருநராற்றுப்படை<br>பெரும்பாணாற்றுப்படை<br>சிறுபாணாற்றுப்படை<br>கூத்தராற்றுப்படை |

43. *பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:*

அ) யானைக்கும் அடிசறுக்கும். (அல்லது)

ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான் - பழமொழி விளக்கம் தருக.

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கும் மிகாமல் விடையளிக்கவும்:** **3×6=18**

44. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' - என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

45. அ) தமிழன் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

46. அ) "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? (அல்லது)

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

47. குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: 4+2=6

அ) "இதில் வெற்றி பெற" என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள "விண்வேறு" என தொடங்கும் மனப்பாட பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "சுடும்" - என முடியும் குறளை எழுதுக.

-------

www.Padasalai.Net